**செ.வெ.எண்.45/2018** **நாள்: 26.01.2018**

**காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் கோவிந்தவாடி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் பங்கேற்றார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியம், கோவிந்தவாடி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பொதுமக்கள் ஆட்சியரிடம் சாலைவசதி, வாய்க்கால் தூர் வாருதல், மருத்துவமனை வசதி, விளையாட்டு உபகரணங்களுடன் விளையாட்டு மைதானம் அமைத்தல், பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டித்தருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை எடுத்துரைத்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும்போது, நாட்டில் கிராமங்கள் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஏற்கனவே நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் தேவையான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் குறித்து பொதுமக்கள் கருத்துக்களை அறியும் வகையில் மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் இதுபோன்ற கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. சாலைகள் சீரமைத்தல், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட கோரிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கால்வாய் சீரமைத்து, பல்வேறு ஏரிகளுடன் இணைத்து தண்ணீர் வீணாவதை தடுக்கும் வகையில் பல்வேறு நிதி ஒதுக்கீட்டிலிருந்து பணிகள் மேற்கொள்ள கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது இப்பகுதி கால்வாய் சீரமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும்.

இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஏற்கனவே கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இடம் தேர்வு செய்யப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த ஊராட்சியில் உள்ள 844 வீடுகளில் 156 வீடுகளில் தனிநபர் கழிப்பறை கட்டப்படவில்லை. போதிய இடவசதி இல்லாத வீடுகளுக்கு சமுதாய கழிப்பறைகள் கட்ட நடவடிக்கை மேற்கொண்டு இவ்வூராட்சி முழு சுகாதார ஊராட்சியாக விரைவில் அமையும் என தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தூய்மை குடியரசு ரதத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். இதன்மூலம் கிராமப்புறங்களை தூய்மையாக பராமரித்தல் மற்றும் தூய்மை பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுதல் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். தொடர்ந்து காஞ்சிபுரம் ஸ்ரீகச்சபேஸ்வரர் திருக்கோயில் நடைபெற்ற குடியரசு தின சமபந்தி விருந்தில் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வாலாஜாபாத் திரு.பா.கணேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயகுமார், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.திருவளர்ச்செல்வி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.கங்காதாரிணி, உதவி இயக்குநர் (பயிற்சி) மதுரா, அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.